Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஇல (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருது ஞூ வைகாசிமீ ககஉ வெள்ளிக்கிழமை (1 June 1962) [இல-அ]

உலகியல் அலை

# விற்பனவுவரிவிதிக்கப்படுமாம்!

## கொள்வனவு வரியும் கொண்டுவரப்பெறுமோ!

——:0:——

சோலை வரி, வருமான வரி, தேசிய விருத்தி வரி என்று சொல்லுக்கடங்காத வரிகளை இறுக்கும் தலைவிதி ஈழத்து மக்களுக்குண்டான நிலைமையே நிலைமை. கூட்டிக் கழித்துப் பார்த்தால் வெயிலில் வாடி வதங்கி வியர்வையால் நனைந்து உழைத்து உழைத்துக் குடியானவன் அரசாங்கத்துக்குக் கொடுத்தபடியிருக்கவேண்டியதுதான் சுதந்திரக் கட்சி அளிக்கும் சுகவாழ்வு.

விற்பனவு வரியும் வரப்போகின்றதாம். வரி என்று ஒரு சொல்லுச் சொல்லிவிட்டாற் போதும். கொள்ளை இலாபக் கூட்டத்தவர்கள் துள்ளி விளையாடத் தொடங்கிவிடுவார்கள். முடிவில் ஒரு பொருளுக்கு விற்பனவு வரி அப்பொருளின் உண்மையான விலைக்கு மேலாக முடிந்துவிடும். ஆட்சியாளருக்கு இதைப் பற்றி ஏதுங் கவலை இல்லை. எப்படியாவது திறைசேரியிற் பணம் நிறைந்தாற் போதும் என்பதுதான் அவர்கள் நோக்கம். விற்பனை வரியின் பின் ஒரு கொள்வனவு வரியும் வந்தாலும் வரும். ஈழம் வாழ் மக்கள் ஈற்றிற் காணும் பயன் ஒன்றுண்டு. மேனி முழுவதும் வரிப்பழுவால் வரிவரியாகத் தழும்புண்டாக்கப்பட்டிருப்பதே,

——

### நற் சிந்தனை

ஏவாது செய்பவரை
இம்மை மறுமைக்கும்
மூவா மருந்தா மொழி.

இன்னலின் வருகைகள் நீ இறைவன்பால் வைத்திருக்கும் நன்னம்பிக்கையின் ஆழத்தைச் சோதிக்கும நிகழ்ச்சிகளாகும். —சுவமி சிவானந்தா.

### அராலியில் அருணாசலம்

எதிர்வரும் 4 - 6 - 62 திங்கட்கிழமை அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் சங்காபிடேகத் திருவிழாவில் யாழ்ப்பாணம் இசையாளர் சங்க ஆதரவில் மேளக்கச்சேரியும், இரவு 8 மணி முதல் நாதஸ்வரமேதை காருக்குறிஞ்சி அருணாசலம்பிள்ளை குழுவினரின் வாத்தியக்கச்சேரியும் நடைபெறும்,

——

உ

வடியேறு திரிசூலம் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றுங்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனர்க்கே.

மைக்களமுமான்மழுவும்வரதமுடனபயமுற
மெய்க்கரமுநாற்புயமும்விளங்குபணிக்கோடும்பூணுஞ்
செக்கருறுமதிச்சடையுஞ்சேயிழையோர்பாகமுமாய்
முக்கணிறையாங்காணமுன்னின்றேயருள்புரிந்தான்.

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருவிழா ஆரம்பம்

சர்வலோக நாயகியாகிய நயினாதீவு ஸ்ரீ. நாகபூஷணி அம்மனின், ஆண்டுதோறும் அழகுற நடைபெறும் மகோற்சவம், இவ்வாண்டு 21-ந்உ (3-6-62) ஞாயிற்றுக்கிழமை பகல் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகும். தேர்த்திருவிழா பதினன்காம் நாள் (16-6-62) சனிக்கிழமை காலையிலும். தீர்த்தத்திருவிழா பதினைந்தாம் நாள் (17-6-62) ஞாயிற்றுக்கிழமை காலையிலும், தெப்பத்திருவிழா பதினாறும் நாள் (18-6-62) திங்கட்கிழமை இரவிலும் மிக அலங்காரமாக நடைபெறும்.

பண்ணைப்பாலம் மூடப்பட்டு ஒழுங்கான வீதி அமைக்கப்பட்டிருப்பதால், புங்குடுதீவு மார்க்கமாக ஏராளமான யாத்திரீகர்கள் வருவார்களென எண்ணிப் புங்குடுதீவு கழுதைப்பிட்டித் துறையிலும், புங்குடுதீவு - புளியடித் துறையிலும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# மாணவரை மலைவுறுத்தும் மயக்கம் நிறைந்த பாடத்திட்டம்

## சைவபரிபாலன சபையின் சாலச்சிறந்த யோசனை

ஷ பாடத்திட்டம் கடினமானது என்று முதன் முதல் மாணவர் கூறினர். பின்னர் ஒரு சில ஆசிரியருங் கூறினர். காலஞ்சென்லச் செல்லப் பேராசிரியர்களும் கூறினர். பெற்றோரும் கூறினர் இப்பொழுது கல்வியதிகாரிகளுங் கூறுகின்றனர். சைவர்களுக்கிருக்கும் ஒரே ஒருஇஸ்தாபனம் “சைவபரிபாலன சபை' அது ஏகமனதாக இப் பாடத் திட்டம்மாறறவேண்டுமென்று தீர்மானித்துப் புதியதொரு பாடத்திட்டம் தயாரித்துள்ளதாயும் அறிகின்றோம்.

எங்கள் செந்தமிழ் மன்றம் இப்பொழுது நடைமுறையிலுள்ள பாடத்திட்டத்தைப் பரிசீலனை செய்தபின், ஏகமனதாக அதை எதிர்க்கிறது. சைவபரிபாலனசபை சிபாரிசு செய்துள்ள திருத்தமான பாடத்திட்டத்தை ஆதரிக்கிறது பரீட்சைப் பகுதி அதிகாரியின் கவனத்திற்கும் பாடத்திட்டத்திலுள்ள தவறுகளையும் மாற்றியமைக்க வேண்டியதன் இன்றியமையாமையையுஞ் சமர்ப்பிக்கின்றது.

பழைய பாடத்திட்டம் சைவப்பெரியார் ஸ்ரீமத் சு. சிவபாதசுந்தரம் அவர்களால் வகுக்கப்பெற்றது. குறிப்பிட்ட பாட புத்தகங்களைக்கொண்டது. பொருத்தமானது. இப் பாடத்திட்டம் இலகுவானதென்றும் இதில் சைவ வேதாகமங்கள், சைவக் கிரியை சம்பந்தமானவைகள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் சில பிரமுகர்கள் கருதியிருக்கலாம். புதியதொரு பாடத்திட்டம் வகுத்தனர்; இவர்கள் வகுத்த திட்டத்தில் ஒரு பெரும் பிழை என்னவென்றால், பாடத்திட்டம் மட்டும் வகுத்ததே. பாடத் திட்டத்திற் குறிப்பிட்டவிஷயங்களில் இன்ன இன்ன குறிப்பிட்ட புத்தகங்களில் மாணவர் படிக்க வேண்டுமென்று விதிக்கவில்லை, ஆகவே புத்தகம் எழுதுபவர்கள் ஒவ்வொருவரும் பாடத் திட்டத்தை வைத்துக்கொண்டு புத்தகங்களை எவ்வளவு பெரிதாய் எழுத இயலுமோ அவ்வளவு பெரிதாய் எழுதினர். கால ஆராய்வு வல்லவர் அதிலும் தமக்குள்ள திறமையைக் காட்டினர்.! அதற்கும் பாடத்திட்டம் இடங்கொடுத்தது! எந்தப் புத்தகத்தைப் படிப்பது? படிப்பிப்பது? பரீட்சிப்பது? புள்ளியிடுவது? என்றெல்லாம் மயக்கங்கள் வந்தன. பாடத்திட்டத்திலுள்ள பிழையோ மன்னிக்க முடியாதது.

பாடத்திட்டம் மூன்று பகுதிகளை உடையது.

i, முதலாம் பகுதி:-

இந்துசமய நூல்கள் என்று தொடங்குகின்றது; நூல்கள் எவை என்பதைத திட்டமாய்ச் சொல்லவுமில்லை; அவற்றைப் பற்றிப் புததகம் எழுதியவர்கள சரியாக — தெளிவாய் எழுதவுமில்லை,

இந்துசமயத்தின் மறு பிரிவுகள்; (அ) சைவம், (ஆ) சாக்தம், (இ) வைஷ்ணவம் என்று அது கூறுகின்றது.

ii. இரண்டாம் பகுதி:-

'சைவ சித்தாந்த சமய நூல்கள்' என்று தொடங்குகின்றது. இதில் முதல் மூன்று உட்பிரிவுகளுக்கும் குறிப்பிட்ட ஒரு நூலிலிருந்து என விதிக்கப்படவில்லை. ஆதலால் யாரும் எதையும் எழுதலாம்!

iii. மூன்றும் பகுதி:-

'வேதாந்த சமய நூல்கள்' என்று தொடங்குகின்றது. இதிலும் மூன்று உட்பிரிவுகளும் அவற்றின் உட்பிரிவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனல் குறிப்பிட்ட பாடப்புத்தகங்களெதுவும் குறிப்பிடப்படவில்லை.

பாடத்திட்டத்தைப்பற்றியும் ஓர் ஆராய்ச்சி ஈண்டுச் செய்யவேண்டியிருக்கிறது:

முதலாம் பகுதி:- — இந்துசமயம்,
இரண்டாம் பகுதி:- — சைவ சித்தாந்த சமயம்,
மூன்றும் பகுதி:- — வேதாந்த சமயம்.

இவற்றில், முதலாம்பகுதியில சைவம், சாக்தம், வைஷ்ணவம் என மூன்று சமயங்களும், ஏனைய இரு பகுதிகளிலும் முறையே சைவ சித்தாந்தம், வேதாந்தம் என இருசமயங்களுமாய் ஐந்து சமயங்கள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

சரி, இத்திட்டத்தின்படி யாம் எந்தச் சமயம்? வேதாந்தி சைவனல்லன். ஆயின், அவன் வேதக்காரன்போலும்!

வேதாந்தம் சித்தாந்தம் என்று திட்டமிட்டால், இரண்டிற்கும் தொடர்பில்லையா?

பாடத்திட்டமோ வேதம் வேதாந்திகளுக் கென்றும், ஆகமம் சித்தாந்திகளுக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## மறவா வரம் வேண்டும்

★

### “அளவையூர் - சஞ்சீவி”

இராகம்: அடாணா. தாளம்: ரூபகம்.

பல்லவி

மறவா வரம் வேண்டும் — உன்னை
மகிழ்ந்து புகழ்ந்து வணங்கவேண்டும்

அநுபல்லவி

அறமாடிய சிதம்ப ரத்தை
அரனே நின்குஞ் சிதபதத்தை (மற)

சரணம்

நானெனதென்ப தொழிந்து — துணை
நமச்சிவாய மென்றுணர்ந்து — அன்புத்
தேனுடன் மனங்குழைந்து — உன்றன்
சேரடியைப் பணிந்து — பணியை (மற)

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சுபகிருது ஸ்ரீ வைகாசி மீ
௧௯ உ வெள்ளிக்கிழமை

## நகராட்சிக்கு நல்ல அறிகுறி

—0—

ஒரே ஆண்டில் இருமுறை நகர பிதாக்கள் தங்களை வழிகாட்டும் முதல்வரைத் தெரிவு செய்யும் கடமைக்குள்ளான நிலைமை யாழ்ப்பாண மாநகருக்குண்டானதைப்பற்றி யாவரும் கவலையும் யோசனையும் கொள்ளும்படி செய்த பொழுதிலும் முடிவில் எதிர்ப்பின்றி ஒரு முதல்வரை அமைக்கும் சூழ்நிலை உருவானது பெரும் ஆறுதலை அளித்திருக்கின்றது. முன் இருமுறை எதிர்ப்பின்றித் தெரிவு செய்யப்பெற்ற பெரும்பிதா சில திங்களின் பின் ஆதரவாளரின் நம்பிக்கையை இழந்து போக வந்தமையை நோக்கும்பொழுது 'எதிர்ப்பில்லாத் தெரிவு' ஏகமனத் தெரிவு ஆக எப்பொழுதும் இருக்குமா என்ற கேள்வி எழுகின்றது. எதிர்ப்புக்கு வேண்டிய ஆட்பலம் இல்லாதவிடத்தும் எதிர்ப்பு உருவாகாதுவிடுதல் சகசம். ஆகையால் நகராட்சிப் பொறுப்பேற்ற முதல்வர் நீதிநெறி தவறாது யாதொரு கட்சியையும் ஆதரித்தோ விரோதஞ்செய்தோ ஒருபாற்கோடாது மக்களின் நன்மைக் குகந்த வழியிற் கடமையாற்றுவாரானல் எல்லாம் இனிது நடைபெறும் என்று எண்ணுகின்றோம். இந்த மனஉறுதியுடனேயே எந்த அலுவல்களையும் இயற்றுவேன் என்று புதுப்பெரும் பிதா வைத்திய கலாநிதி. தருமலிங்கம் அவர்கள் தந்திருக்கும் வாக்கு நகராட்சிக்கு நல்ல அறிகுறியாகும். அவ்வாறு செவ்வனே யாழ்ப்பாண மாநகர ஆட்சி செயற்படுவதற்கு மக்களும் நகரபிதாக்களும் வைத்திய கலாநிதி. தருமலிங்கத்துக்கு உறுதுணையாக இருந்து பொது நலங்கருதி உழைப்பார்களாக.

### கடவுள் வழிபாடின்றேற் கல்வியாற் பயனேது

ஆந்திரநாட்டு மாதரார் மகவினர் நலம் பேணுஞ் சபையின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தைத் தொடக்கி வைக்கும் பொழுது பாரத தேசத் தலைவர் கலாநிதி. இராதாகிருட்டினன் அவர்கள் 'கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழா ரெனின்' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வியின் நோக்கம், மனிதப்பண்பு பெறுதல் என்று கூறி அப்பண்பை அடைவதற்கு ஆன்மார்த்த அறிவு வேண்டும் என்று விரித்துரைத்தனர்.

நாலறிவும் சாலவமைந்த பொருட்செறிவும் மட்டுமே மனித வாழ்வை வளம்படுத்துவன என்று எண்ணுவார் பலர் இருக்கின்றனர் எனவும், அன்னார் இறைநெறி என்பதை மறந்து மலைவுறுவது கவலைக்கிடமானதெனவும் சுட்டிக்காட்டிக் கலாநிதி. இராதாகிருட்டினன் அவர்கள் சமயிகளாய் மக்கள் திகழ வேண்டுமென நன்கு விளக்கிக்காட்டினர். மெய்யறிவு பெறுவதற்குச் சமய அறிவு வேண்டுமென்பதைப் பள்ளிக்கூடங்களில் மாணக்கர் உள்ளத்தில் நன்கு படியும் வண்ணம் பாடபுத்தகங்கள் அமைக்கப்பெறல் வேண்டும். இளம் வயதிலே உண்டாகும் எண்ணங்கள் புனிதமானவையாய் வாழ்க்கையின் நன்னோக்கத்துக்குரியனவாய் அமைவதற்கு கல்விமுறை செம்மையானதாய்த் திகழ்தல் வேண்டும்,

ஆகவே தேசத்தொண்டின முதற்படி கல்விப்பணி. அதற்கு அடிப்படையாக இன்றியமையாதது சமயியாயிருக்கப் பயனளிக்கும் கல்விமுறை. இவ்வுண்மையை உணர்ந்து பொதுநலச்சேவைபுரியும் நோக்கமுள்ளவர்கள் செயலாற்றுவார்களாக.

# 'வேதாந்தம் - சித்தாந்தம்'

—0—

# சமயங்களா? சமயதத்துவங்களா?

—0—

[ பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை ]

வேதாந்தம் அத்வைதம். சித்தாந்தம் ஏகபாவம். இவை இரண்டும் அடிப்படையும் முடிபும் ஆன இரு தத்துவங்கள்.

கடவுளுக்கு அட்டமூர்த்தம் சொல்லப்படும். மூர்த்தம் வடிவம். பஞ்சபூதங்கள் சந்திர சூரியர் ஆன்மா என்பன அந்த வடிவங்கள். எட்டுஇடங்களில் ஆன்மா தவிர்ந்த ஏழு இடங்களும் படர்க்கை முன்னிலைகள். எங்குமாய பொருளை, படர்க்கை முன்னிலையில் வழிபடும் வழிபாடு துவைத வழிபாடு. தன்னைவிட்டகலாத பொருளைத் தன்னின் வேறு ஆக எண்ணி வழிபடுதலின் இவ் வழிபாடு துவைதம் எனப்பட்டது. துவைதம் இரண்டு.

தன்னில் வேறாகாத பொருளை ஆன்மாவாகிய தன்னிற் கண்டு வழிபடும் வழிபாடு அத்வைத வழிபாடு. இந் நிலையில் சார்ந்ததன் வண்ணமாகும் ஆன்மா தன்னைக் கடவுள் மயமாகக் காணும். இப்பொழுது நான் பிரமம் என்று அது சொல்லும். இஃது அத்வைத பாவனை. இந்தப் பாவனைக்குத் துவைதம் சாதனம்.

'ஒதரிய துவைதமே அத்வைத ஞானத்தை உண்டு பணும் ஞானம் ஆகும்'. எனபது தாயுமானவர்.

இதன்மேல் பாவனை பாவம் ஆதல் வேண்டும். பாவந்தான் சித்தாந்தம். அஃது ஏகம். பாவனையிற் பேத உணர்ச்சி யுண்டு. பாவத்தில் அஃதில்லை.

நாம் இந்தச் சரீரத்தையே நாம் என்கிறோம். இது பாவனையன்று பாவம். இவ்வாறே இதற்கும் மேலாகப் பேத உணர்ச்சியேயின்றி, நாம் சிவமே என்கின்ற ஏகபாவநிலை ஒன்று உண்டு. அதுதான் முடிந்த முடிபு; சித்தாந்தம்.

ஏக பாவத்துக்குச் சாதனம் அத்வைத பாவனை. அத்வைத பாவனைக்குச் சாதனம் துவைத வழிபாடு.

துவைத அத்வைத ஏகங்கள் தத்துவங்கள்.

துவைதம் சரியை கிரியை.

அத்வைதம் யோகம்.

ஏகம் ஞானம்.

என்றிங்ஙனம் வைத்து, அரும்புமலர் காய் கனி போல்வன என அவற்றின் தொடர்பை விளக்கலாம்.

துவைத + அத்வைத + ஏகம் = துவைதாத்வைதைகம். மூன்றாகிய இத்தத்துவத் தொடர்புகளை விளக்க எழுந்தவைகளே மெய்ச் சமயங்கள். அவைகள் அகச்சமயங்கள் எனவும் கூறப்படும். அவைகள் 'மெய்தரு சைவமாதி இருமூன்று' என்பது சித்தியார்.

அகச்சமயம் ஆறு ஆறனுள் தலையாயது சைவ சமயம். சைவம் துவைதாத்வைதைகதத்துவ விளக்கம்.

இப்படிப்பட்ட சைவத்துக்கே பாடத்திட்டம் வேண்டும்.

இப்போழுது நடைமுறையில் இருக்கும் இந்துசமய பாடத்திட்டம், தத்துவம் எது? சமயம் எது? என்பகை புலமாகாத, திக்குத்திசை தெரியாத மயக்கத்தை விளைக்கின்ற ஒரு பெருங்காடு.

—தொடரும்.

### "யாழ்ப்பாணத்தில்

# 'வடிவு' இன்றும் பேச்சு வழக்கில் உள்ளது"

—0—

[திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர், **வித்துவான் ஐயன் பெருமாள் கோனார்** அவர்கள் புதன்கிழமை, **23-5-62** யாழ்ப்பாண மத்திய கல்லூரித் தமிழ் மன்றத்தில் திரு. ஷண்முக குமரேசன் தலைமையில் செல்வன் கு. சிற்றம்பலத்தின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் தொடங்கி செல்வன் ஆ. குணசிங்கம் கூறிய நன்றியுரையோடு முடிவடைந்த வரவேறபுக்கூட்டத்தில் ஆற்றியசொற்பொழிவின் சாரம்,]

பழமை வாய்ந்த மத்திய கல்லூரியிற் பேசுவது பெருமைக்குரியது. நாவலர் வாழ்ந்த யாழ்ப்பாணத்தில் தமிழ் இன்றும் இனிமையுடனும் தூய்மையுடனும் விளங்குகின்றது. 'வடிவு' என்ற சோல் தமிழ் நாட்டில் இலக்கியத்திற்றான் காணலாம் ஆனல் இனிய வாத்தியமாம யாழைத் தன் பெயரில் வைத்திருக்கும் யாழ்ப்பாணத்தில் மக்கள் **'வடிவு'** என்ற சொல்லைப் பேச்சிலும் கையாளுகின்றார்கள்.

"தமிழுக்குக்'கதி'யாவார் இருவர்" என்னும் கூற்றில் 'கதி' என்றசொல்லே அவ்விருவரையும் ('க' - கம்பர், 'தி' திருவள்ளுவர்) குறிக்கின்றது. வள்ளுவன் மானத்தைப்பற்றி அழகாகக் கூறியிருக்கிறான். தலையிலிருந்து விழுந்த மயிரை யாரும் தொடவே விரும்புவதில்லை. மயிர் தலையிலிருக்கும்போது அதைப் பக்குவமாகப் பேணுகிறோம். முன்னளிற் பெண்கள் உட்கார்ந்து தலை சீவினார்கள். கையில் வந்த மயிரைக் கால்விரல்களுக்கிடையில் இடுக்கி வைத்துப் பின் தூரத்துக் கொண்டுபோய் எறிந்தனர். ஆனல் இந்நாளிற் பல பெண்கள் நடந்து நடந்து தலை சீவுகின்றனர். மயிர் சமையல் அறைக்குப் போகின்றது. உண்பவர் வாய்க்குள்ளும் சென்றுவிடுகிறது. இதனை உடனே வெளியிற் போடுகிறோம். இந்த இழிநிலையிலிருக்கும் மயிருக்குமானமிழந்தவனை வள்ளுவன் நிகராக்குகின்றான்.

"தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

என்பது குறள். இதன் கருத்து வெளிப்படையாகி விட்டது.

'வால்மீகி தந்த இராமாயணம் பலாக்கனியாயிருக்க அதைக் கம்பன் கீறிப் பிசின் அகற்றிச் சுளை சுளையாகத் தேனும் சேர்த்துத் தருகிறான்' என்று நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை காட்டுகின்றார். சொல்லாட்சியும் ஓசை நயமும் கம்பனிடம் பரக்கக் காணப்படுகின்றன. 'வா' என்றுஒருவனைமனங்குளிர வரவேற்கின்றோம்.மிதிலைக் காட்சியில் இச் சொல்லைக் கொண்டு மிதிலை மாநகரம் கொடிகளாகியதன் கைகளை நீட்டி இராமனை அழைக்கின்றதாம்.

"மையறு மலரில் நீங்கி
யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள இருந்தாள் என்று
செழுமணிக்கொடிகள்என்னுங்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர்
கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென்
றழைப்பது போன்ற தம்மா"

என்பது கம்பன் பாட்டு.

சிலப்பதிகாரத்தில் மதுரைக்குச் சென்ற கோவலனைத் தடுப்பதுபோன்று வாராதே என்று கொடிகள் ஆடியதாக இளங்கோ காட்டுகின்றார். இவ்வாறு இயற்கையில் அமைத்து வில்லிபுத்தூராழ்வாரும் பாரதத்திற் பாடுகின்றார்.

உறங்குகின்ற கும்பகருணனை இராவணனின் ஏவலாளர் மழு, ஈட்டி மூதலிய ஆயுதங்களால் இடித்து எழுப்ப முயல்கின்றனர். அக் காட்சியைக் கம்பன் காட்டுவதில்எழுகின்றஓசை போர் வாத்தியங்கள் மீட்டுவதைப்போன்றது.

"உறங்கு கின்ற கும்ப கர்ண
உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்று காண்
எழுந்திரா யெழுந்திராய்
... ... ... ... ... ..."

என்று கம்பன் பாடுகின்றான். வேறோரிடத்தில் வல்லெழுத்துக்களை அதிகமாகப் பிரயோகித்து ஆவே

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

நல்லைக் கீர்த்தனம்—2.

# இளநகை புரிவதும் ஏனோ?

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம்: ஸிம்மேந்திர மத்யமம் தாளம்: ஆதி

பல்லவி

இளநகை புரிவதும் ஏனோ? — முருகா
வளநிறை நல்லையம் பதியினில் அமர்ந்தருள் (இளநகை)

அனுபல்லவி

அழகனே குழகனே அறுமுகனே குகனே
அன்பருக் கருளிய ஆனந்தந் தானோ? (இளநகை)

சரணம்

கந்தனேஉந் தனைநாளும் சிந்தனைசெய் தேனேநாளும்
எந்தனைக்காத் திடவா விந்தமலர் பதந்தாராய்
அந்தமும்ஆ தியுமில்லா அரும்பெருஞ் சோதிநீயே
வந்தெனை ஆட் கொள்ளத்தானோ? வடிவேல் முருகா இந்த
(இளநகை)

# தமிழரசர்காலமும் தலைநகரும்

## வடிவு இன்றும்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தைக் காட்டுகின்றான். அவலத்துக்கேற்ற ஓசையையும் கம்பன் கவிதையிற் காணலாம்.

மாணவர்கள் கம்பன் கவிதையில் ஈடுபட்டு வேறு நல்ல நூல்களையும் படித்து நாவலர்களாகவும் எழுத்தாளர்களாகவும்விளங்கவேண்டும். சிறந்த நூல்கள் இருக்கக்கூடியதாக இன்றுவந்து நாளை திரும்பும் 'மலிவு' நூல்களைப் படித்தலாகாது. யாழ்ப்பாண மக்கள் காட்டும் அன்பு மேலும் வளர வேண்டும்; அறிவும் பெருக வேண்டும். 'போனாற் போகட்டும்' என்று பாடிக்கொண்டிருந்தாற் போதாது.

—


### கோட்டு விற்பனவு விளம்பரம்

தெல்லிப்பளை மேற்கு
1. சண்முகம் சரவணமூத்து
2. சரவணமுத்து பெண் இராசம்மா

—வழக்காளிகள்.

வழக்கு இல M B 1895,
எதிராக
மாவிட்டபுரம்
1. தம்பு கந்தையா
2. கந்தையா பெண் வள்ளிப்பிள்ளை

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1895-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1962-ம் வருடம் ஆனிமாதம் 23-ந் திகதி (23-6-62) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 2329-17 சதமும், 23 - 10 - 57 தொடக்கம் 2-10-59 வரைக்கும் ரூபா 1500/-க்கு 10 வீத வட்டியும், அதன்பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கொமிஷன், முத்திரைச் செலவு ரூ. 6/-ம்.

காணியின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம், டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோயிற்பற்று, பளை இறை, 'ஊரியாவத்தை" (Ooriawaththai) விலப்பரப்பு 6½. எல்லை கிழக்கு சின்னப்பா சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். வடக்கு வேலு கதிரித்தம்பியின் ஆதனம். மேற்கு நாகமுத்து தருமலிங்கத்தின் ஆதனம் தெற்கு முருகேசு வைரமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலிலும் சொரியலாக அரைப்பங்கும் (½) சின்னத்துரை கைம்பெண் செல்லம்மாவுக்கும் மற்றையோருக்குமுரிய ஊரியாவத்தை என்னும் காணியிலுள்ள கிணற்றில் தண்ணீர்ப்பங்கும்; வடகிழக்கிலுள்ளது; வழிவாய்க்கால் பாவிப்பதற்குரிய வழமையான உரித்தும்; சின்னப்பா சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்குமுரிய ஊரியாவத்தை என்னும் கிழக்குப்பக்கத்திலுள்ள காணிக்கு ஊடாக உள்ள பாதையால் இந்தக் காணியிலிருந்து போகவும் வரவும் உள்ள பாவிப்புரிமையும்; யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் H 266/154-ல் பதியப்பட்டது.

சே. பாண்டித்துரை,
கொமிஷனர் விலைமதிப்பாளர்,
ஏலதார், தரகர்.
Commissioner of Sales,
Valuer Auctioneer & Broker.
மல்லாகம். 15-5-62.
M. 25 1-6-62.


## கனகசூரியன் இராசதானி என் நல்லூருக்குப் போகவேண்டும்?

முற்றொடர்—4

இனி, இத்தலைநகர் வரலாறு பற்றி "இலங்கையிற் கலைவளர்ச்சி' என்னும் நூலார் கருத்தைத் காண்பாம். அவர்கள் மேற்படி நூல் ஏழாம் அத்தியாயம் 'யாழ்ப்பாணத்திற் சைவ ஆலயங்கள்' என்னும் தலைப்பில் பின்வருமாறு கூறுகிறார்கள். "யாழ்ப்பாணக்குடாநாட்டிற்குக் கதிரைமலை, சிங்கைநகர், நல்லூர் என்னும் நகரங்கள் முறையே இராசதானிகளாகக் காலத்துக்குக் காலம் விளங்கினவென யாழ்ப்பாணச் சரித்திரம் கூறும். நாகர்களது ஆதிக்கம் சிறந்து விளங்கிய காலத்தில் கதிரைமலை (கந்தரோடை) தலைநகராக விளங்கியது.......... எட்டாம் நூற்றாண்டில் கலிங்கதேசத்து அரசனாகிய உக்கிரசிங்கன் கதிரைமலையைக் கவர்ந்து நாகதீபத் திற்கரசனானான். இவனே மாருதப்புரவீகவல்லி என்னும் சோழ இராசகுமாரத்தியை மணந்து அவளின் விருப்பத்திற்கிணங்கி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்தவன். இவ்வரசன் சிறிது காலத்துக்குப்பின் பருத்தித்துறைக் கணித்தாயுள்ள வல்லிபுரம்

**பண்டிதர் பொ, ஜகந்நாதன்**

என்னும் இடத்தில் ஒருநகரை அமைத்து அதற்குச் சிங்கைநகர் என்னும் பெயரிட்டு அங்கிருந்து நாட்டை ஆண்டு வந்தான். பன்னிரண்டாம நூற்றாண்டின் ஆரம்பத்தில் சோழ நாட்டை ஆண்ட முதலாம் குலோத்துங்கன் தன் சேனாபதியாகிய கருணாகரத் தொண்டைமானை அனுப்பி இலங்கையை வென்ற நிகழ்ச்சி அவன் சாசனங்களிலும் கலிங்கத்துப்பரணியிலுங் கூறப்பட்டுள்ளது....... கி. பி. 1410-ம் ஆண்டில் அரசனாகிய குணவீரசிங்கையாரியன எனப்படும் பரராசசேகரனே சிங்கை நகரிற் கடைசியாகச் சிறப்புடன் அரசுசெலுத்திய மன்னனாவான். (இராமேச்சுரக் கர்ப்பக் கிரகத்தைத் திருகோணமலைக் கற்களைக்கொண்டு கி, பி. 1414-ம் ஆண்டில் கட்டுவித்த அரசனும் இவனே.) பரராசசேகரன் மகன் கனகசூரிய சிங்கை ஆரியன் ஆட்சிக் காலத்தில் (கி பி. 1450) கோட்டை அரசனாகிய ஆறுபராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு தன் சேனைத் தலைவனான செண்பகப்பெருமாளை அனுப்பினான். செண்பகப்பெருமாள் நகரை அழித்து அரசனையும் வெற்றிகொண்டான். பராக்கிரமவாகுவின் அனுமதியோடு செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்துக்கரசனானான். சிங்கைநகர் பாழாகிவிட்டதனால் நல்லூரை இராசதானியாக்கி ஸ்ரீ. சங்கபோதி புவனேகவாகு என்னும் பெயருடன் செண்பகப்பெருமாள் 17 வருடங்களாக ஆண்டு வந்தான். இவனே நல்லூர்கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்தவன் கோட்டை அரசனாகிய ஆறும்பராக்கிரமபாகு இறந்தபின் இவன் அங்கு சென்று ஆறும் புவனேகவாகு என்னும் பெயருடன் அரசனாக இருந்து யாழ்ப்பாணத்துக்கரசனாக விஜயபாகுஎன்னும் ஒருவனை நியமித்தான்.

விஜயபாகுவின் காலத்தில் கனகசூரியன் தென்னிந்தியாவில் இருந்து சேனையுடன் வந்து விஜயபாகுவை வென்று நல்லூருக்கரசனானான். கனகசூரியனுக்குப்பின் அவன் குமாரன் சிங்கைப்பரராசசேகரன் கி. பி. 1478 - ல் அரசனானான். இவனே நல்லூரைச் சைவ ஆலயங்களும் மாடமாளிகைகளும் நிறைந்த நகரமாக்கியவன். இவ்வரசன் நகருக்கு வடபாலில் சட்டநாதர் திருத்தளியையும், கிழக்கில் வெயிலுகந்தப்பிள்ளையார் ஆலயத்தையும், தென்பாலில் கைலாயநாதர் கோவிலையும், மேற்கில் வீரமாகாளி அம்மன் திருப்பதியையும் அழகுபெறக் கட்டுவித்தான். கந்தசுவாமி கோவிலுக்கருகில் ஒரு திருக்குளம் அமைத்து அதற்கு யமுனாரி என்னும் பெயரிட்டான். இக்குளம் இன்னும் நல்லூரில் காணப்படுகிறது. இலங்கையிற் கலைவளர்ச்சி பக். 46—49. இங்கே சிற்சில ஐயங்களைத் தெளிவுபடுத்திக்கொண்டு அப்பால் செல்வாம். யாழ்ப்பாணச் சரித்திராசிரியர் சிலர் சிங்கைநகரத்தரசர்களைச் சிங்கையாரியர் என்று எழுதாமல் சிங்காரியர் என்று எழுதுகிறார்கள். அவர்களுக்கு, அம்மன்னருக்கு அப்பெயர் சிங்கைநகர் காரணமாகத் தான் வந்தது என்று புலப்படவில்லை. நிற்க இவர் பழைய தலைநகரங்களான செங்கடற்கலநகரியையும் யாழ்ப்பாடியின் யாழ்ப்பாணத்தையும் புராதன தலைநகரங்களுடன் சேர்த்து எண்ணவில்லை. அவையும் யாழ்ப்பாணக்குடாநாட்டிற்கு முன்னர்த் தலைநகரங்களாக இருந்தவைதான். அவை கதிரைமலைக்கும் சிங்கைநகர்க்கு மிடைக்காலத் திருந்தவை என்பது மேல்வரும் ஆராய்ச்சியாற் புலப்படுத்தப்படும்.

எட்டாம் நூற்றண்டில் கதிரைமலையில் இருந்து அரசாண்ட உக்கிரசிங்கன் மாற்றிக்கொண்ட தலைநகரம்தான் வல்லிபுரத் தலைநகரமானால் அதுவும அவ்வெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாயன்றோ அறியப்படும். இவர் வல்லிபுரத்தில்தான் சிங்கைநகர் என்னும் கருத்துடையார் என்பது முன்னர்ப் பெற்றாம். ஆயின் கி. பி 1410 வரை ஆட்சிசெய்த குணவீரன் தான் அந்நகரிற் கடைசி அரசன் என்று சொன்னதற்கு யாதொரு ஆதாரமும் காட்டவில்லை. அந்நகர் இவன் பின்னர் என்ன ஆனது. கடற்கோட்பட்டதா, போரால் அழிக்கப்பட்டதா, இவன் மகனான கனகசூரியன் முதலாய சிங்கையாரிய பரம்பரையினர் இன்னொரு இடத்திற்கு (நல்லூர்க்கு)ப்போய் அரசுபுரியக் காரணம் என்னை? செண்பகப்பெருமாள் படை எடுப்பினால் அந்நகர் அழிபட்டதாமாலோ வெனின் அப்பொழுதிருந்தவன் இவன் மகனான கனகசூரியன் என்றல்லவோ (பண்டைய யாழ்ப்பாணம்) யாவை, விமர்சனகாரரும் சொற்றனர். —தொடரும்.


### சேக்கிழார்நாயனர் குருபூசை

நாள்: சுபகிருதுஹூ வைகாசிமீ உசஉ (6 - 6 - 62) புதன்கிழமை.
இடம் : சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்
நிகழ்ச்சிகள்:
மு. ப, 9-30 — பி. ப. 1.
சிவபூசை மண்டபத்தில் சிவபூசை, நாவலர் மண்டபத்தில் கடவுளாராதனை, புராணபடனம் சேக்கிழார் புராணம்.
இரவு விரிவுரைக்கூட்டம்
தலைவர் பண்டிதர் பிரம்மஸ்ரீ.
வ, மு. இரததினேசுவரஐயர் அவர்கள்.
உபந்நியாசம்
பெரியபுராணம்
பண்டிதர்,
திரு. வே சங்கரப்பிள்ளைஅவர்கள்.
சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.
மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 30-5-62.


இவ்வாரம் (3 - 6 - 62 — 9 - 6 - 62)

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பணமளவில் இவ்வாரமும் சாதகமானதாக இருக்கும். கல்வி ஈடுபாடுகளில் வெற்றியும் ஏற்படும். ஆனால் சிறு உடல்நிலைக் கோளாறுகள் ஏற்படும்-

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

எல்லாத்தடைகளையும் உம்மால் தாண்டிவிட முடியும். தம்பி தங்கைகள் மிகவும் உதவுவர். ஆனால் உடல்நிலை மட்டும் திருப்திகரமாக இருக்காது. கண் நோய்களும் உண்டாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

தொழில் விவகாரங்கள் தொடர்ந்து சாதகமாகவே இருக்கும். வீட்டிலும்சரி அலுவலகத்திலும்சரி உமது வேலைகள் மிக எளிதாக நிறைவேற்றப்பெறுவீர் நிலபுலங்களால் இலாபமும் உண்டாம். இனத்தவருடன் சில சச்சரவுகளும் ஏற்படும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

குடும்ப விவகாரங்கள் இவ்வாரமும் குழப்பமாகவே இருக்கும். உடல் நிலையும் திருப்திகரமாயிருக்காது. பணமளவில் ஓரளவு நல்ல வாரம்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

இவ்வாரத்தில் பண இலாபங்கள் நிச்சயம். உமது பெரும்பான்மையான அலுவல்களில் துரித முன்னேற்றம் ஏற்படும் நண்பர்களும் உறவினரும் மிக உதவுவர். எதிர்ப்புக்களைத்தோடிவிடும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

குடும்ப விவகாரங்கள் மேலும் சிலகாலம் குழம்பலாகவே இருக்கும். உடல்நிலை தொடர்ந்து திருப்தியற்றதாகவே இருக்கும். அலுவலகத்தில் சச்சரவுக்கும் தடையில்லை. உமது எல்லாப் பொறுப்புக்களிலும் கவனமாக நடந்துகொள்ளவும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

குடும்பநிலை மேலும் திருப்தியற்றதாகவே இருக்கும். மனைவி மக்களுக்குச் சுகவீனம் ஏற்படும். புதிய முயற்சிகள் வெற்றிதரும். ஞாயிறு காலையை எச்சரிக்கையோடு கழிக்கவும்,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஞாயிறு மாலை, திங்கள் செவ்வாயை எச்சரிக்கையோடு கழிக்கவும். வார மிகுதிப்பகுதி வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்றது. எதிரிகளுக்கு இன்னல்களும் ஏற்படும். ஆனால் உமக்கு வேலை கூடுதலாக இருக்கும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலை மேலும் பிரச்சினையாகவே இருக்கும். அலுவலகத்தில் கலகமும் உண்டாம். நீர் கடுமையாகப் பாடுபடவேண்டியிருக்கும். புதன் வியாழனையும் வெள்ளி காலையையும் எச்சரிக்கையோடு கழிக்கவும். கடைசி இரு நாட்களும் வியாபார ஈடுபாடுகளுக்கு ஓரளவு ஏற்றவை.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும். (குடும்ப விவகாரங்களும்

தொடர்ச்சி 4ம் பக்கம்)




# ஞானசம்பந்தர்
## முருகப்பெருமானின் ஓர் அம்சமே

பரதகண்டம் புண்ணிய பூமி. ஈழமண்டலம் பாவ பூமி என்பர். அது தவறு; ஈழநாடும் புண்ணியபூமி என்பது திருமூலர் திருவாக்கு. அது நிற்க,

திருஞானசம்பந்தரை முருகப்பெருமானின் ஆயிரங் கூற்றில் ஒருகூறு என்றுரு மூளர். அப்படிக் கூறக்கூடாதென்பது ஒரு விவாதம் சற்று ஆராய்ந்தால் உண்மை புலப்படும். அகச்சான்று புறச்சான்றுகளை நோக்குக.

"ஈசர் மிழலை யிறையவர்பால்
இமையப் பாவை திருமுலைப்
தேசமுய்ய வுண்டவர்தாம் [பால்
திருமகனு ராதலினுல்
காசு வாசி யுடன் பெற்ருர்
கைத்தொண்டாகுமடிமையி
வாசியில்லாக் காசுபடி [னுல்
பெற்று வந்தார் வாசேர்."
(சேக்கிழாரடிகள்)

தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவாரஐயர்

"கழுமலத் ததித்த ஞானக்
கான்முளை வந்தான் வந்தான்
மழையெனக் கருணை யென்பால்
வழங்கியசெவ்வேள்வந்தான்"
(வென்றிமாலைக்கவிராயர்)

"சமணரைக் கழுவேற்றிய
பெருமாளே"
(அருணகிரியார்)

சிவபரம்பொருளும், குமரநாயகனும் ஒரேவித சக்தியுடையவரே; உலகருள் காரணமாகப் புரியும் அவ்விறைவர் திருவிளையாடல்கள் மக்கள் கருத்துட்பட்டன அன்று. ஆகவே, ஞானசம்பந்தப்பெருமானும் சிவகரணம்பற்றி நின்று படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய அருளல்களைப் புரிந்தமையும் போற்றுந்தகையனவே என்க.

## மாணவரை மலைவுறுத்தும்......
*1-ம் பக்கத் தொடர்ச்சி*

கென்றும் கூற முகஞ் செய்கின்றது. இவ்வாருயின் இது பெருந்தவறு. சைவ வினுவிடைகூடத் தெரியாதவர்கள் வகுத்த திட்டம் போலத் தெரிகிறது?

இந்த நாட்டில் எல்லோரும் சைவ சித்தாந்திகளே. ஆதலால், சைவ சித்தாந்த மரபுக்கேற்ற 'ஜீ. சீ. ஈ' மாணவருக்குப் பொருத்தமான குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஆதாரமாய்க் கொண்டுள்ள ஒரு பாடத் திட்டந்தான் இன்று நமக்கு வேண்டுவது.

இப்பொழுது நடைமுறையில் இருந்துவரும் புதிய பாடத்திட்டமோ அளவு கடந்ததும், சைவசித்தாந்தப் பிள்ளைகளையும் ஆசிரியர்களையும் மலைவுறச் செய்வதும், சைவசித்தாந்த மரபுக் கொவ்வாததும் மாணவர் பிழையான கருத்துக்களை மெய்யென நம்புவதற்கு வழி செய்வதுமாயிருக்கின்றது.

சைவபரிபாலன சபையின் அங்கீகாரம் பெற்ற புதிய பாடத்திட்டமோ சைவ சித்தாந்த மரபுக் கொத்ததும், வெகு தெளிவானதும். குறிப்பிட்ட பாட புத்தகங்களிலிருந்து விஷயம் பெறத்தக்கதுமாயுள்ளது. அதில் சாத்திரம், திருவருட்பயன் — திருக்குறள்) தோத்திரம், (தேவார திருவாசகங்கள்) சமய பிரமாண நூல், (இரண்டாம் சைவ வினுவிடை — வேதாகம இயல்) சரித்திரம் (சமயாசாரியர் சந்தானுசாரியர் சரிதம்) எல்லாமுடைத்தாய்ச் சாலச் சிறந்ததாயமைந்துள்ளது.

ஆகவே, நடைமுறையில் இருந்து வரும் பாடத்திட்டத்தைத் தவிர்த்து, சைவபரிபாலன சபையின் அங்கீகாரம்பெற்றுவரும் புதிய பாடத்திட்டத்தை "சைவ சமய பாடத் திட்டம்" என்னும் பெயரோடு அங்கீகரிக்குமாறு எங்கள் 'செந்தமிழ்மன்றம்' தாழ்மையுடன் வேண்டுகின்றது.

பொ. கந்தையனுர்
செந்தமிழ் மன்றச் செயலாளர்
சாவகச்சேரி, 31-5-62.

## குரும்பசிட்டியில் இலவச படக்காட்சி

குரும்பசிட்டி சன்மார்க்க சபைமண்டபத்தில் சென்ற 30-5-62 புதன்கிழமை மாலை, பாடசாலை மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் பயன்படக்கூடிய சிறந்தமுறையில் தயாரிக்கப்பட்ட படங்களை அமெரிக்க தகவல் பகுதியினர் இலவசமாகக் காண்பித்தனர்.

## வைத்தியர் முத்துக்குமாரு கந்தையாவின் பிரிவு

மானிப்பாய் கிறீன் வைத்தியக் கல்லூரியிற் பயின்று வைத்தியராகப் பலகாலம் கடமையாற்றிய மல்லாகம் திரு. முத்துக்குமாரு கந்தையா அவர்கள் 80-ம் வயதில் இவ்வுலக வாழ்வு நீத்தனர். பிரபல வைத்திய குடும்பத்தைச் சேர்ந்த இவர் தெய்வபக்தி, ஆலய வழிபாடு, பொதுசன சேவை முதலியவற்ருல் நன்கு மதிக்கப்பட்டவராய், ஊர் உபகாரியாய் வாழ்ந்துவந்தனர். மல்லாகம் வீரபத்திரர்கோயிற் புனருத்தாரணத்தைச் செவ்வனே செய்து முடித்துச் சைவப்பணியாற்றிய பெரியார் இவர். மல்லாகம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. க தவராசா இவரின் ஏகபுத்திரன். உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதி திரு. S. தாமோதரம்பிள்ளையின் மனைவியார் திருமதி. தனலட்சுமியும், இலங்கை வங்கி உதவிச் சிருப்பர் திரு. K. சின்னையாவின் மனைவியார் திருமதி. கனகமணியும் புதல்விகள்.

## நயினதீவு, ஸ்ரீ. நாகபூசணி.
1-ம்பக்கத் தொடர்ச்சி

ஆட்களை ஏற்ற வசதியான பெரிய யந்திர வள்ளங்கள் ஓடும். அத்துடன் வழமைபோல் காரைநகர், ஊர்காவற்றுறைத் துறைமுகங்களிலும் பாலத்திலேயே லோஞ்சுகளை அணைத்து யாத்திரீகர்களை ஏற்றுவதற்கு வசதிகள் செய்யப்படும். இலங்கைப் போக்குவரத்துச்சபையினரும் வழமைபோல் போதிய விசை வண்டி வசதிகள் செய்வார்கள். குடிதண்ணீர், சுகாதார பாதுகாப்பு வசதிகள் ஏற்ற முறையில் ஒழுங்கு செய்யப்படும்,

பகல் திருவிழா பிற்பகல் 3 மணிக்குள்ளும், இரவுத் திருவிழா இரவு 2 மணிக்குள்ளும் முடிவுறும்.

# அவனன்றி யோரணுவு மசையாது

(முற்றெடர்-2)

பிரமா அன்னப் பட்சியாக மேலே ஆயிர வருடஞ் சென்றும் சோதியின் முடியைக் காண முடியவில்லை. ஆகாயத்தில் சித்தர்கள் தோன்றி விட்டுணு அடியைக் காண முடியாமல் பூமியையடைந்த சிவபெருமானை அர்ச்சப்பதைத்தெரிவித்தார்கள், பிரமா பின்பு பூமியை யடைந்து விட்டுணுவினுடன் சேர்ந்து சிவபெருமானை வழிபட்டார். அவர்கள் இருவரும் அகந்தை முதலிய குற்றங்களினின்றும் நீங்கச் சிவலிங்கமொன்றினைத் தாபித்துச் சிவனை வழிபட்டார்கள், அப்பொழுது சிவபெருமான் காளகண்ட முடமான் மழுவும் வரத அபய திருக்கரங்களும் ஞானச்சந்திரன் பொருந்திய திருச்சடையுமுடைய திருக்கோலங்களுடன் பார்வதி சமேதராய அச்சோதிக்கணித்தாகக் காட்சியளித்தார். சிவபெருமான் அவர்களுக்கு மெய்ஞ்ஞானத்தைக் கொடுக்க அவர்கள் அவரைப் பக்தியோடு வழிபட்டுத் துதித்தார்கள்.

"புந்திமயக்கிப் பொருங்காலை
யெம்முன்னிற்
செந்தழலின் மேனி கொடு
சென்றருளித் தொல்லறிவு
தந்து கனையுணர்த்தித்
தாக்க மருக்கினையா
லெந்திரம் யாமுண்ணியன்
றியற்றுகின்ருய் நீயன்றே"

"சுவாமி, அகந்தையினுல அறிவு மயங்கிப் போர் செய்த காலத்தில் எங்கள் முன்னிலையில் சோதிப் பிழம்பாகத் தோன்றிஎங்களுக்குப் பழைய மெய்யறிவைத் தந்து உம்மை உணரச் செய்து எங்கள் போரையும் நீக்கி அருளைப் புரிந்தீர். இதனுல் நாங்கள் எந்திரமாக விருக்கின்றேமென்பதையும் அதனை இயக்குகின்ற கருத்தாவாக நீர் இருக்கின்றீர் என்ற உண்மையையும் இப்பொழுது உணர்ந்து விட்டோம்" என்று இருவரும் கூறித் துதித்தார்கள. பின்பு சிவபெருமான் திருவருள் புரிந்து அவர்களுக்கு முதன்மையைக் கொடுத்தார்.

— "மயூரன்" —

பிரமாவிட்டுணுவாகிய இருதேவர்களும தங்கள் செயலைப் பெரிதென மதித்தமையினுல் நேர்ந்த சிறுமையை இவ்வரலாறு விளக்குகின்றது. அவ்வாறிருப்ப, பல்பிணி வாய்ப்பட்டு உழலும் சினனுள் வாழ்க்கையை நடத்துகின்ற அறப மானுடர் தங்கள் செயலைப் பெரிதென மதிப்பது எவ்வளவுபேதமை. அவர்கள் எவ்வாருன இழிவையடைவார்களென்பதை நாம் ஊகித்தறியலாம். ஆனுல் சிவபெருமான் உரியகாலத்தில் அவர்களுக்கும அகந்தையைப் போக்கி யருள் புரிவார்,

"வேர்மரத்துக்காதாரம்
வேர்கரு மரமன்றமலன்
ஆருயிர்க்காதார முயிரன்று"

மரத்துக்கு வேர் ஆதாரமாகவிருக்கின்றது. வேருக்கு மரம் ஆதாரமாக இருக்கவில்லை. அது போல நின்மலனுகிய சிவபெருமான் நிறைந்த உயிர்களுக்கு ஆதாரமாகவிருக்கின்ருர். உயிர்கள் கடவுளுக்காதாரமாக விருக்கவில்லை. இந்த உண்மையை யுணர்ந்து கடவுள் ஒருவர் இருக்கின்ருர். அவரே சர்வலோகநாயகரென்பதை விசுவசித்து நாம் வாழ்க்கையை நடத்துவோமானுல் இம்மையின்பதைதையும பறுமையின்பதைதயும நாங்கள் அடைவோம்.

தனக்கினிய வஞ்சகரே
தாந்த முதற்சாரார்

தனக்கினியார் தம்முதற்
சார்ந்தார்.

தனக்கு மிகுந்த வஞ்சகனுகவுள்ளவன் யாரென்ருல் தன் தலைவனுகிய சிவபெருமானை அடையாதவன். அத்தகையவனே தனக்குக் கொடிய வஞ்சகன். தனக்கு இனியவன் யாரென்ருல் உலகுக்குக் கர்த்தாவாகவுள்ள தன் முதல்வனை வழிபடுகின்றவன் அத்தகையவனே தனக்கு நட்பாகவுள்ளவன்.

## சைவப்பிரசங்கம்

நிகழும் சுபகிருது வருஷம் சித்திரை மாதம் 20-ம்திகதி (3-5-62) வியாழக்கிழமை

"அருட்குரு"

என்னும் பொருள்பற்றியும், ஷ மாதம் 21-ம்திகதி (4-5-62) வெள்ளிக்கிழமை

"மானுடபபிறவியின்
இலட்சியம்"

என்னும் பொருள்பற்றியும், சரவணை இந்தன் பிள்ளையார்கோயிலில் அராலி தெற்கு சைவப்பிரசாரகர் திரு, வே. கந்தையா அவர்களாற் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன,

இம்மாதம் 14-ம்திகதி (27-4-62) வெள்ளிக்கிழமை அராலி மேற்கு நொச்சிகாட்டுப் பிள்ளையார் கோயிலில்,

"அருட்குரு"

என்னும் பொருள்பற்றியும், சித்திரை மாதம் 30-ம் திகதி (13-5-62) ஞாயிற்றுக்கிழமை

"மானுடப்பிறவியின்
இலட்சியம்"

என்னும் பொருள்பற்றியும் மாதகல் அரசடி சித்திவிநாயகர் கோயிலும் ஷ சைவப்பிரசாரகர் அவர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன.

M 51 1-6-62.

## இவ்வாரம் உங்கள்
(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சிருப்திகரமாயிருக்காது. ஆனுல் தொழிலளவில் சாதகமானதாகவே இருக்கும். வெள்ளி சனியை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

இவ்வாரம் அந்நியர்மூலமாகப் பெரும் இலாபம் அடைவீர். உடன் பிறந்தோர் தொடர்ந்து உதவியாக இருந்துவருவர். எதிரிகளுக்கு இன்னல் ஏற்படும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

உமது தொழில் தனிப்பட்ட விவகாரங்கள் இவ்வாரம் சீர்திருந்தும், பண இலாபங்களும் உண்டாகும். ஆனுல் உடல்நிலைமட்டும் திருப்திகரமாயிருக்காது.

## கருத்துக் கலசம்

இந்த நாட்டிலுள்ள அனைவரும் ஒருவர் மொழியை ஒருவர் பேதமின்றிக் கற்ருல் இப்போது நம்மிடையே இருக்கும கசப்பும் வேதனையும் ஒருநாளும் இருக்காது.

— மைத்திரபால செனநாயகா

x x x

நாடகம் மிகவும் சிறந்தது. நாடகத்தினுல் மற்றக் கலைகளையும் படித்துவிடலாம்.

— கலையரசு சொர்ணலிங்கம்.

x x x

தமிழ்மொழி இல்லையென்ருல் மலையாள மொழியேது?

—ஒரு மலையாள அறிஞர்.

## அதிபர் ஆசைப்பிள்ளைக்குப் பாராட்டு

யாழ் — இந்துக்கல்லூரியில் சென்ற 25 ஆண்டுகளாகத் துணை முதல்வராகவும் முதல்வராகவும் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற ஆசைப்பிள்ளை அவர்களுக்கு இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினரால் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

## இந்துசாதனம்

சந்தா விபரம்:-

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ 9-00 |
| கல்வி நிலையங்களுக்கு | 4-50 |
| அரை ஆண்டு சந்தா | 4-50 |

'இந்துசாதனம்',
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## பிழை திருத்தம்

சென்ற இந்துசாதனத்தில் 3-ம் பக்கம் வெளியான வாழ்த்துப்பாவில், "எண்பாணுண்குற்றனன்" என்பதை, "எண்பாணுண் டுற்றனன்" என்று திருத்திக்கொள்ளவும்,

## கைக்கூலிகொடுத்துக் கழற்றும் திட்டம்!



பெரியவர்: நாடற்றவர்களுக்குக் காசுகோடுத்து நாடுகடத்த இலங்கை அரசாங்கம் ஒருதிட்டம் போடுகிறதாம். இவர்களை எந்தநாட்டுக்கு அனுப்பபோகிருர்கள்.

விகடன்: அது பெருங்காரியமா! அடுத்த நாட்டுக் கனுப்புவது: அந்தநாட்டிலும் அப்படிப்பணங் கோடுத்து இன்னெரு நாட்டுக் கனுப்புவது; இப்படி உலகம் சுற்றிவர உயிரும் போகும்காலம் வந்துவிடுமே.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 1-6-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், [illegible]